## December 12, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஒரு மில்லியன் டாலர் (சுமார் ரூ.9 கோடி) செலுத்தினால் அமெரிக்க குடியுரிமை பெற வகை செய்யும் அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் 'தங்க அட்டை' (கோல்டு கார்டு) திட்டம் அமலுக்கு வந்தது.
   i. தலைசிறந்த அமெரிக்க பல்கலைக்கழகங்களில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்கள் நீண்ட காலம் அமெரிக்காவிலேயே தங்கிப் பணிபுரிய வசதியாக இந்த தங்க அட்டை திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
   ii. அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் ஐபிஎம் நிறுவன இந்திய-அமெரிக்க தலைமைச் செயல் அதிகாரி அரவிந்த் கிருஷ்ணா, டெல் தொழில்நுட்ப நிறுவன தலைமைச் செயல் அதிகாரி மைக்கேல் டெல் உள்பட பல்வேறு முன்னணி தொழில் நிறுவன நிர்வாகிகளுடன் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டுக்குப் பிறகு இந்த அறிவிப்பை டிரம்ப் வெளியிட்டார்.
   iii. இந்த தங்க அட்டையைப் பெறுபவர்கள் 5 ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்க குடியுரிமையைப் பெறு வதற்கான தகுதியைப் பெறுவர்.
2. வெனிசுலாவையொட்டிய கடல் பகுதியில் எண்ணெய் ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியது.
   i. இது, போதைப் பொருள் பயங்கரவாதத்துக்கு எதிராக அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு நடத்தி வரும் போரின் ஒரு பகுதி என்று கூறப்படுகிறது.
   ii. ஸ்கிப்பர்' என்ற அந்தக் கப்பல்வில் இருந்து 20 லட்சம் பேரல் டிசம்பர் 2-ஆம் தேதி வெனிசுலா கச்சா எண்ணெய்யுடன் புறப்பட்டது. இதில்பாதி கியூபா அரசுக்கு சொந்தமான எண்ணெய் இறக்குமதி நிறுவனத்துக்கு உரியது என்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன.
   iii. இதற்கு முன்னர் எம்/டி அடிசா என்று அழைக்கப்பட்ட ஸ்கிப்பர் கப்பல் 2022-ல் ஈரான் புரட்சிகர காவல்படை, லெபனானின் ஹிஸ்புல்லா படையினருக்கு ஆதரவாக சட்டவிரோத எண்ணெய் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறி அதற்கு அமெரிக்கா தடை விதித்தது.
   iv. வெனிகலா உலகின் மிகப்பெரிய எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ளது. அங்கு நாளொன்றுக்கு 10 லட்சம் பேரல் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்கிறது. அரசு எண்ணெய் நிறுவனமான பிடிவிஎஸ்ஏ நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக செயல்படுகிறது.
   v. இந்தச் சூழலில், வெனிசுலாவில் இருந்து எண்ணெய் ஏற்றி வந்த கப்பலை அமெரிக்கா கைப்பற்றியுள்ளது. புதிய போருக்கு வித்திடலாம் என்று சில அமெரிக்க எம்.பி.க்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.
3. பல்கேரியாவில் ஊழல் மற்றும் பொருளாதார மோசடி குற்றச்சாட்டுகளுடன் அரசுக்கு எதிராக நடைபெற்ற தீவிர போராட்டங்களைத் தொடர்ந்து அந்த நாட்டு அரசு ராஜிநாமா செய்தது. ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடான அது யூரோ மண்டலத்தில் சேர இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில் அரசு ராஜிநாமா செய்துள்ளது.
   i. நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்புக்கு நடைபெறுவதற்கு முன்னதாக முன்பாக இந்த அறிவிப்பை பிரதமர் ரோசென் ஷெல்யாஸ் கோவ் வெளியிட்டார்.
4. வங்கதேசத்தில் மாணவர் போராட்டத்தின் மூலம் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆவாமிலீக் அரசு கவிழ்க்கப்பட்ட பிறகு நடக்கும் முதல் பொதுத் தேர்தல், வரும் 2026 பிப்ரவரி 12-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

i. அதே நாளில் அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் தலைமையிலான தேசிய ஒப்புதல் குழுவின் சீர்திருத்த முன்மொழிவுகள் குறித்து பொது வாக்கெடுப்பும் நடத்தப்படும்
ii. இந்தத் தேர்தலில் போட்டியிட ஹசீனாவின் ஆவாமி லீக் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
iii. உடல் நிலை கவலைக்கிடமாக உள்ள முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் பிஎன்பி கட்சிதான் தற்போது முன்னணியில் உள்ளது.
iv. ஆவாமி லீக் இல்லாத நிலையில் அதன் முன்னாள் கூட்டணி கட்சியான ஜமாத்-ஏ-இஸ்லாமி மற்றொரு முக்கிய கட்சியாக உள்ளது. இரு கட்சிகளும் 300 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கான வேட்பாளர்களை ஏற்கெனவே அறிவித்துள்ளன.

5. துபையில் நடைபெறும் ஆசிய யூத் பாரா விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவின் அப்துல் காதிர் இந்தூரி, ஆடவருக்கான 50 மீட்டர் பட்டர்ஃப்ளை, 50 மீட்டர் பேக்ஸ்ட்ரோக் ஆகிய பிரிவுகளில் தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.
6. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நூற்றுக்கணக்கான பொருள்களுக்கு அடுத்த ஆண்டு முதல் 50 சதவீதம் வரை புதிய சுங்க வரியை விதிக்க மெக்ஸிகோ அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

i. மெக்ஸிகோவுடன் முறையான வர்த்தக ஒப்பந்தம் இல்லாத இந்தியா, சீனா உள்பட ஆசிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 1,400-க்கும் மேற்பட்ட பொருள்களுக்கு, இந்த வரி உயர்வை விதிக்கும் பரிந்துரையை மெக்ஸிகோ நாடாளுமன்ற செனட் அவை அண்மையில் அங்கீகரித்துள்ளது.
ii. மெக்ஸிகோவில் உள்ளூர் வேலைவாய்ப்பையும், உள்நாட்டு உற்பத்தியையும் பாதுகாப்பதுதான் இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.
iii. இந்தத் திடீர் சுங்க வரி உயர்வு, ஆசிய நாடுகளின் ஏற்றுமதியைக் கணிசமாக பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவைச் சேர்ந்த வாகனத் தயாரிப்பாளர்களுக்குப் பெரும் பின்னடைவு ஏற்படும். ஏனெனில், தென்னாப் பிரிக்கா, சவூதி அரேபியாவுக்கு அடுத்த படியாக இந்தியாவுக்கு 3-ஆவது பெரிய கார் ஏற்றுமதி சந்தையாக மெக்ஸிகோ திகழ்கிறது. அந்தவகையில், இந்தியாவின் சுமார் 108 கோடி டாலர் மதிப்பிலான கார் ஏற்றுமதி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.
iv. நடப்பாண்டில் மெக்ஸிகோவுக்கு இந்தியாவின் மொத்த ஏற்றுமதி மதிப்பு 563 கோடி டாலர் ஆகும். இதில் வாகன ஏற்றுமதியே முதலிடத்தில் உள்ளது. வாகனங்களுக்கு அடுத்தபடியாக, மின்சாரம் மற்றும் மின்னணு சாதனங்கள்(61.23 கோடி டாலர்), இயந்திரங்கள் மற்றும் கொதிகலன்கள்(56.08 கோடி டாலர்), வேதிப்பொருள்கள்(38.80 கோடி டாலர்), அலுமினியம்(38.60 கோடி டாலர்), மருந்துப் பொருள்கள்(21.12 கோடி டாலர்) போன்றவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே, இந்தத் துறைகளும் கூடுதல் வரியால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளன.
v. மெக்ஸிகோவின் இந்த அதிரடி முடிவு, இந்திய வாகன உற்பத்தியாளர்களின் ஏற்றுமதி வருவாயைக் கணிசமாக குறைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.
vi. எனவே, மத்திய வர்த்தக அமைச்சகம் உடனடியாக மெக்ஸிகோவுடன் பேச்சு வார்த்தை நடத்தி, இந்தப் புதிய சுங்க வரியிலிருந்து விலக்கு பெற வேண்டும் அல்லது மாற்றுத் தீர்வுகளைக் காண வேண்டும் என்பது அந்தத் துறையினரின் கோரிக்கையாக உள்ளது.

7. இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் எரிபொருள் கப்பலை உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில், மத்திய துறைமுகங்கள், சுப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
    i. ஹைட்ரஜன் எரிபொருள் கப்பல்களைப் பயன்படுத்தும் சீனா, நார்வே, நெதர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளின் வரிசையில் இந்தியா இப்போது இணைந்திருப்பது சர்வதேச அளவில் பெருமைக்குரிய விஷயமாகும்.
    ii. கடந்த பத்து ஆண்டுகளில், தேசிய நீர்வழித்தடங் நீர்வழித்தடங்களின் எண்ணிக்கை 5-லிருந்து 111-ஆக உயர்ந்துள்ளது. உள்நாட்டு நீர்வழித்தடங்களில் சரக்குப் போக்குவரத்து 2014-இல் 8 கோடி டன்னாக இருந்த நிலையில், தற்போது 14.5 கோடி டன்னுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
    iii. இந்த மாற்றத்துக்கு 'ஜல் மார்க் விகாஸ்' திட்டம் அடித்தளம் அமைத்தது. இந்தத் திட்டத்தின் கீழ், ஹல்டியாவிலிருந்து வாரணாசி வரையிலான முதல் தேசிய நீர்வழித்தடத்தில் பல்வகை முனையங்கள், நவீன உபகரணங்கள் மற்றும் சமுதாய படகு குழாம்களுடன் ஒரு நவீன நீர் வழிப் போக்குவரத்துப் பாதை உருவாக்கப்பட்டுள்ளது.